# புனித சவேரியார் பேராலயம்

## கோட்டாறு





**பெருவிழா அழைப்பிதழ்**

**24.11.2022**
**வியாழன் முதல்**
**03.12.2022**
**சனி வரை**



அன்புடையீர்,

திருமறை போதக நாடுகளின் பாதுகாவலர், இந்திய நாட்டின் திருத்தூதர் என அன்புடன் நாம் அழைக்கும் புனித பிரான்சிஸ் சவேரியார் நம் முன்னோர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க கடல் கடந்து வந்தவர். புனித பவுலின் அதே நற்செய்திப் பணி ஆர்வத்தால் தூண்டப்பட்டவர். ஏழ்மை, கல்லாமை, மூடநம்பிக்கை போன்றவற்றிலிருந்து மக்கள் வாழ்வு பெற சமயம், சமூகம், கலாச்சாரம் கடந்து தன்னை அர்ப்பணித்தவர், நமது இறை நம்பிக்கைக்கு ஆழமான அடித்தளமிட்ட ஒளி தீபம். அவர் எழுதிய கடிதங்களிலிருந்து நமது மண்ணில் அவரது வாழ்வையும், பணியையும் இன்னும் அதிகமாக அறிந்து கொள்கிறோம். அவரது வாழ்வுப் பயணத்தை இத்திருவிழா நாட்களில் சிந்திக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அவரது இறையாட்சிப்பயணத்தில் நாமும் உடன் பயணிப்போம். கேட்ட வரம் தரும் கோட்டாறு புனித சவேரியார் வழியாக இறையருள் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*அன்பு நிறை வாழ்த்துகளுடன்*

பேரருட்பணி. **A.S. ஆனந்த்**

(கோட்டாறு வட்டார முதன்மைப் பணியாளர்)

அருட்பணி. **ஸ்டான்லி சகாய சீலன்** (பங்குத்தந்தை)

அருட்பணி. **ஆன்றோ ஜெராபின்** (இணைப் பங்குத்தந்தை)

**அருட்சகோதரிகள், பேராலய அருட்பணிப்பேரவை**

**மற்றும் இறைமக்கள்,** கோட்டாறு

# பேராலயச் சிறப்பம்சங்கள்

ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?
(லூக் 9:25)

கேட்டவரம் தரும் கோட்டாறு புனித சவேரியார் பேராலயம் ஆயிரக்கணக்கான மக்களின் இதயங்களை ஒவ்வொரு நாளும் அற்புதங்களால் ஈர்த்துக்கொண்டிருக்கிறது. பல்வேறு வரலாற்றுச் சிறப்புகளுடன் விளங்கும் கோட்டாறு புனித சவேரியார் பேராலயம் சாதி, சமய, மொழி வேறுபாடுகளின்றி எல்லா மக்களும் நாடிவரும் கோடி அற்புதங்கள் விளையும் புண்ணிய பூமியாகக் காட்சியளிக்கிறது.

## வரலாற்று நிகழ்வுகள்




- புனித சவேரியாரின் வருகைக்கு முன்னரே கோட்டாறில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் கி.பி. முதல் நூற்றாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மறைப்பணி ஆற்றிய புனித தோமையாரால் கிறிஸ்தவர்கள் ஆனவர்கள்.
- கி.பி. 1542 முதல் கி.பி. 1552 வரையுள்ள காலக் கட்டத்தில் புனித சவேரியார் கோட்டாறில் பணியாற்றியுள்ளார்.
- கோட்டாறை மையப்பகுதியாகக் கொண்டு ஏறக்குறைய 45 இடங்களில் கிறிஸ்தவச் சமூகங்களை நம் புனிதர் கட்டியெழுப்பினார்.
- கோட்டாறில் அவரே புனித ஆரோபண மாதா ஆலயம் ஒன்றை எழுப்பி தனது புனிதமிக்க கரங்களால் திருப்பலி நிறைவேற்றி வந்தார்.
- கி.பி. 1552இல் டிசம்பர் 03ஆம் தேதி புனித சவேரியார் இயற்கை எய்தினார்.
- கி.பி. 1602இல் திருவிதாங்கூர் மகாராஜா இத்தாலி நாட்டு அருட்பணியாள அந்திரேயாஸ் புச்சாரியோ சே.ச. அவர்களிடம் கோட்டாறில் ஓர் ஆலயம் கட்டுவதற்குத் தேவையான இடத்தைத் தானமாக வழங்கினார்.



- கி.பி. 1603இல் அருட்பணி. அந்திரேயாஸ் புச்சாரியோ அவர்கள் புனித சவேரியார் வழிபாடு நடத்திச் செபித்த இடத்தில் களிமண்ணாலும் மரத்தாலும் ஆன மூவொரு இறைவன் ஆலயம் ஒன்றைக் கட்டினார். புனித சவேரியார் மீது கொண்ட பற்றினாலும் பக்தியினாலும் இந்த ஆலயத்தை மக்கள் சவேரியார் கோவில் என்றே அழைத்தார்கள்.



- கி.பி. 1605இல் மூவொரு இறைவன் ஆலயமானது புனித சவேரியாருக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- கி.பி.1640இல் கற்களாலான புதிய ஆலயம் கட்டி எழுப்பப்பட்டது.
- கி.பி.1643இல் புனித இஞ்ஞாசியார் மற்றும் புனித சவேரியாரின் திருப்பண்டங்கள் கோட்டாறு ஆலயத்தில் வைக்கப்பட்டன.




- கி.பி.1752இல் மறைசாட்சி தேவசகாயம் உடலின் எஞ்சிய பாகங்கள் ஆலய மணிகள் முழங்க பவனியாகக் கொண்டுவரப்பட்டு கோட்டாறு ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டன.
- கி.பி.1865இல் ஆலயம் மேற்கு, வடக்கு, தெற்குப் பகுதிகளில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதனால் ஆலயம் சிலுவை அடையாளத் தோற்றத்தைப் பெற்றது.
- கி.பி.1876இல் ஆலயப் பீடம் அழகிய மரத்தால் வடிவமைக்கப்பட்டது. மரத்தால் செய்யப்பட்ட புனித சவேரியார் சுரூபம் கோவாவிலிருந்து கொண்டு வரப்பட்டு பீடத்தில் நிறுவப்பட்டது.




- கொல்லம் மறைமாவட்டத்திலிருந்து 30.05.1930இல் கோட்டாறு தனி மறைமாவட்டமாகப் பிரிக்கப்பட்டு கோட்டாறு ஆலயம் பேராலயமாக உயர்த்தப்பட்டது.
- புனித சவேரியார் இந்தியாவுக்கு வருகை புரிந்ததன் 400ஆவது ஆண்டு நினைவாகக் கி.பி. 1956இல் கோபுரம் கட்டப்பட்டு அதன்மேல் புனித சவேரியார் சுரூபம் நிறுவப்பட்டது.



- 1955 செப்டம்பர் 28இல் ஆலயம் மீண்டும் விரிவாக்கம் செய்யப்பட்டது. புனித ஆரோபண அன்னை ஆலயம் பேராலயத்தோடு இணைக்கப் பட்டது. பேராலய வளாகத்தின் வடக்குப் பகுதியில் புனித லூர்து அன்னை கெபி அழகுறக்கட்டப்பட்டது.

- கி.பி.1992இல் புனித சவேரியார் இந்தியாவுக்கு வருகை புரிந்ததன் 450ஆவது ஆண்டு நினைவாகப் பேராலயம் புதுப்பிக்கப்பட்டது.
- புனித சவேரியார் இந்தியாவுக்கு வருகை புரிந்ததன் 450ஆவது ஆண்டு நினைவாக அவர் கட்டி எழுப்பிய புனித ஆரோபண அன்னை ஆலயத்தில் முழுநேர நற்கருணை ஆராதனை 01.05.1994 அன்று தொடங்கப்பட்டது.




- 29.10.2009 அன்று வெண்கலத்தாலான கொடிமரம் நிறுவப்பட்டது.
- திருப்பீடம் மீண்டும் 29.10.2010 அன்று புதுப்பிக்கப்பட்டது.
- 20.03.2013 அன்று மாதா சிறப்புப் பவனி துவங்கப்பட்டது.
- பிரதி மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமை மாலை 6:15 மணிக்கு லூர்து அன்னை கெபியின் முன் செபமாலை மற்றும் சிறப்பு நற்கருணை ஆசீர் வழிபாடு நடைபெறுகிறது.




- 08.09.2014 அன்று புதுப்பிக்கப்பட்ட புனித லூர்து அன்னை கெபி அர்ச்சிக்கப்பட்டது.
- 09.12.2016 பேராலய மறுசீரமைப்புப் பணி துவங்கப்பட்டது.
- 18.11.2017 புதுப்பொலிவூட்டப்பட்ட பேராலயம் அர்ச்சிக்கப் பட்டது.
- நவம்பர் 24 முதல் டிசம்பர் 03, 2017 வரை முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது. பேராலயப் பாதுகாவலர் பெருவிழா, புனித சவேரியாரின் இந்திய வருகையின் 475ஆம் ஆண்டு நிறைவு மற்றும் புதுப்பொலிவூட்டப்பட்ட ஆலய அர்ச்சிப்பு விழா.




- 15.05.2022 அன்று மறைசாட்சி தேவசகாயம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். அவரது கல்லறை அமைந்துள்ள இப்பேராலயத்தில் திருத்தந்தையின் இந்தியத் தூதுவர் தலைமையில் பேராயர்கள், ஆயர்கள் முன்னிலையில் 06.06.2022 அன்று நன்றிவிழாத் திருப்பலி நடைபெற்றது.
- 08.09.2022 அன்று மறுசீரமைக்கப்பட்ட புனித பாத்திமா அன்னை சிற்றாலயம் அர்ச்சிக்கப்பட்டது.



## பேராலய வழிபாடு மற்றும் விழாக்கள்

| | |
|---|---|
| தினமும் காலை 6:15 மணி | : திருப்பலி |
| நாள் முழுவதும் | : நற்கருணை ஆராதனை |
| வெள்ளி மாலை 6:15 மணி | : புனித சவேரியார் நவநாள் திருப்பலி |
| ஞாயிறு காலை 6:15 மணி | : திருப்பலி |
| காலை 8:00 மணி | : திருப்பலி |
| மாலை 5:00 மணி | : திருப்பலி |
| மாதத்தின் இரண்டாம் சனி | : மாதா பவனி, நற்கருணை ஆசீர். |
| நவம்பர் 24 – டிசம்பர் 03 | : பேராலயத் திருவிழா |
| மாதத்தின் இறுதிச் சனி மாலை 6:15 மணி | : மறைசாட்சி புனித தேவசகாயத்திற்கான நவநாள் திருப்பலி. |
| மாதத்தின் முதல் வெள்ளி மாலை 6:15 மணி | : திருப்பலி, நற்கருணை ஆராதனை. |

- திருவிழாவின் எட்டாம் நாளன்று இரவு 10:30 மணிக்குத் தேர் பவனி நடைபெறும்.
- திருவிழாவின் ஒன்பதாம் நாளன்று சிறப்பு மாலை ஆராதனைக்குப் பின் இரவு 10:30 மணிக்குத் தேர்ப் பவனி நடைபெறும்.
- திருவிழாவின் நிறைவு பத்தாம் திருவிழாவன்று காலை 11:00 மணிக்கு சிறப்புத் தேர்ப் பவனி நடைபெறும்.





## 1
## 24.11.2022
## வியாழன்

**"கடவுளின் பணிக்காய் அனைத்தையும் துறந்தேன்"**

தொநூ 12:1-4; பிலி 3:6-11; மத் 19:27-30

காலை 6.15 : திருப்பலி, இராஜாவூர் பங்கு இறைமக்கள்

காலை 8.00 : திருப்பலி, அருகுவிளை இறைமக்கள்

மாலை 6.00 : **திருக்கொடியேற்றம், ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**

தலைமை & மறையுரை **பேரருட்பணி. ஹிலேரியஸ்**
கோட்டாறு மறை மாவட்ட முதன்மை அருட்பணியாளர்

சிறப்பிப்போர் : **காவல்துறையினர்**

## 2
## 25.11.2022
## வெள்ளி

**"நற்செய்தியை அறிவிக்க பயணங்கள் பல செய்தேன்"**

எசா 52:4-10; 2கொரி 11:23-31; மாற் 1:35-39

காலை 5.30 : திருப்பலி

காலை 6.30 : திருப்பலி, புனித ஞானப்பிரகாசியார் இளநிலைக் குருத்துவ கல்லூரி, புனித சேவியர் மறைபரப்பு இல்லம்.

காலை 8.30 : திருப்பலி, சிறுமலர் தொடக்க மேல்நிலைப் பள்ளிகள், நாகர்கோவில்.

காலை 9.30 : திருப்பலி, புனித சவேரியார் தொடக்க மற்றும் உயர்நிலைப்பள்ளிகள், கோட்டாறு.

காலை 10.30 : திருப்பலி, புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஆயர் இல்லம், நாகர்கோவில்.

காலை 11.30 : திருப்பலி, இரயில்வே பணியாளர்கள்

மாலை 6.30 : **ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**

தலைமை & மறையுரை : **கன்னியாகுமரி மறைவட்ட அருட்பணியாளர்கள்**

சிறப்பிப்போர் : பேராலய மரியாயின் சேனை பிரசீடியங்கள், பேராலய குடும்ப நல இயக்கம்.

## 3
## 26.11.2022
## சனி

### "நற்செய்திப் பணியாளர்கள் என் தோழர்கள்"

திப 15: 30-35; 1கொரி 1:17-21; யோவா 15:12-17

காலை 5.30 : திருப்பலி

காலை 6.30 : திருப்பலி, மறவன் குடியிருப்பு பங்கு இறைமக்கள்.

காலை 8.30 : திருப்பலி, வேதநகர் பங்கு இறைமக்கள்.

காலை 9.30 : திருப்பலி, குருசடி பங்கு இறைமக்கள்.

காலை 10.30 : திருப்பலி, வடசேரி, மீனாட்சிபுரம் மற்றும் கிருஷ்ணன்கோவில் பங்கு இறைமக்கள்.

காலை 11.30 : திருப்பலி, வள்ளியூர் பங்கு இறைமக்கள்.

மாலை 6.30 : **ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**

தலைமை & மறையுரை : **கோட்டாறு மறைவட்ட அருட்பணியாளர்கள்**

சிறப்பிப்போர் : பேராலய அன்பிய ஒருங்கிணையம் புனித வின்சென்ட் தே பவுல்சபை.

## 4
## 27.11.2022
## ஞாயிறு

### "எல்லோர்க்கும் எல்லாம் ஆனேன்"

சீரா 7:20-30; 1கொரி 9:19-23; மத் 5:13-16

காலை 6.15 : திருப்பலி

காலை 8.00 : முதல் திருவிருந்துத் திருப்பலி

காலை 11.00 : குணமளிக்கும் திருப்பலி (இறை இரக்க தூதுவர் குழுவினர்)

மாலை 6.30 : **ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**

தலைமை & மறையுரை : **ஆலஞ்சி மறைவட்ட அருட்பணியாளர்கள்**

சிறப்பிப்போர் : பேராலய கத்தோலிக்கச் சங்கம், கத்தோலிக்க சேவா சங்கம்.

## 5
**28.11.2022**
**திங்கள்**

### "ஏழைகளின் வாழ்வைப் புரிந்து கொள்கிறேன்"

**சீஞா 4:1-10; யாக் 2:1-8; லூக் 16:19-25**

காலை 5.30 : திருப்பலி, மருத்துவர்கள்

காலை 7.00 : திருப்பலி, திருச்சிலுவை கல்லூரி, குருசடி.

காலை 8.30 : திருப்பலி, திருஇருதய சபை சகோதரிகள், குருசடி.

காலை 9.30 : திருப்பலி, கார்மல் நகர் பங்கு இறைமக்கள்.

காலை 10.30 : திருப்பலி, பிஷப் ரெமிஜியூஸ் CBSE பள்ளி, கார்மல் நகர்

காலை 11.30 : திருப்பலி, கத்தோலிக்க வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு

மாலை 6.30 : **ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**

தலைமை & மறையுரை : **முட்டம் மறைவட்ட அருட்பணியாளர்கள்**

சிறப்பிப்போர் : **நகர வியாபாரிகள்**

## 6
**29.11.2022**
**செவ்வாய்**

### "கற்பித்தால் நல்ல கிறிஸ்தவர்கள் ஆவார்கள்"

**விப 23:20-22; திப 2:42-47; யோவா 13:12-17**

காலை 5.30 : திருப்பலி

காலை 6.30 : திருப்பலி, புன்னை நகர் பங்கு இறைமக்கள்.

காலை 8.30 : திருப்பலி, கார்மல் மேல் நிலைப்பள்ளி, இராமன்புதூர்.

காலை 9.30 : திருப்பலி, புனித பிரான்சிஸ் தொடக்க மற்றும் மேல்நிலைப்பள்ளிகள், அசிசி வளாகம், நாகர்கோவில்.

காலை 10.30 : திருப்பலி, கத்தோலிக்க ஆசாரிமார் இறைமக்கள்

காலை 11.30 : திருப்பலி, புனித ஜெரோம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அனந்த நகர்.

மதியம் 12.30 : திருப்பலி, உள்நாட்டு மீனவ சங்கங்கள், கோட்டாறு.

மாலை 6.30 : **ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**

தலைமை & மறையுரை : **குளச்சல் மறைவட்ட அருட்பணியாளர்கள்**

சிறப்பிப்போர் : **ஆசிரியர்கள்**

**7**
**30.11.2022**
**புதன்**

## "மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்"

**இச 18:9-13; கலா 4:8-11; மாற் 3:22-30**

காலை 5.30 : திருப்பலி
காலை 6.30 : திருப்பலி, அன்னாள் பிறரன்பு சபை அருட் சகோதரிகள்.
காலை 8.30 : திருப்பலி, புனித வளனார் தொடக்க மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், நாகர்கோவில்.
காலை 9.30 : திருப்பலி, ஆயர் ஆஞ்ஞிசுவாமி கல்வியியல் கல்லூரி, முட்டம்.
காலை 10.30 : திருப்பலி, புனித தெரசா மெட்ரிக் பள்ளிகள் கோட்டாறு, வழுக்கம்பாறை.
காலை 11.30 : திருப்பலி, புனித ஜாண்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அம்மாண்டிவிளை.
மதியம் 12.30 : திருப்பலி, பளுஉந்து பாரம் சுமக்கும் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம், கோட்டாறு.
மாலை 6.30 : **ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**
தலைமை & மறையுரை : **தேவசகாயம் மவுண்ட் மறைவட்ட அருட்பணியாளர்கள்**
சிறப்பிப்போர் : **போக்குவரத்து கழகங்களின் பணியாளர்கள்**

**8**
**01.12.2022**
**வியாழன்**

## "எதிரிகளுடன் நல்லுறவை ஏற்படுத்துங்கள்"

**1சாமு 24:1-10; உரோ 12:14-21; மத் 5:38-42**

காலை 5.30 : திருப்பலி
காலை 6.30 : திருப்பலி, கத்தோலிக்க பொது பணியாளர்கள் சமூக நலச்சங்கம்
காலை 8.30 : திருப்பலி, லொயோலா பொறியியல் கல்லூரி லொயோலா நகர், தோவாளை.
காலை 9.30 : திருப்பலி, கீழ ஆசாரிப்பள்ளம், பங்கு இறைமக்கள்.
காலை 10.30 : திருப்பலி, இளங்கடை, தெங்கம்புதூர் பங்கு இறைமக்கள்.
காலை 11.30 : திருப்பலி, காமநாயக்கன்பட்டி பங்கு இறை மக்கள்
மதியம் 12.30 : திருப்பலி, கிறிஸ்தவத் தொழிலாளர் இயக்கம் மற்றும் ஆட்டோ ஓட்டுனர்கள்.
மாலை 6.30 : **ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**
தலைமை & மறையுரை : மேதகு ஆயர். **பீட்டர் ரெமிஜியூஸ்,** முன்னாள் ஆயர், கோட்டாறு மறைமாவட்டம்
சிறப்பிப்போர் : **தெற்கு ஊர் இறை மக்கள்**
இரவு 10.30 : **தேர் பவனி**

## 9
## 02.12.2022
## வெள்ளி

**"கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்கிறது"**

2கொரி 5:13-19

காலை 5.30 : திருப்பலி

காலை 6.30 : திருப்பலி

சிறப்பிப்போர் : வடக்கு ஊர் இறைமக்கள்

மாலை 6.30 : **சிறப்பு மாலை ஆராதனை, நற்கருணை ஆசீர்**

தலைமை & மறையுரை : மேதகு ஆயர். **நசரேன் சூசை**
கோட்டாறு மறைமாவட்டம்

இரவு 10.30 : **தேர்பவனி**

## 10
## 03.12.2022
## சனி

**"வாழ்வின் எல்லா சூழலிலும் இறைவனே நம் துணை"**

எசா 61:1-3; 1 கொரி 9:16-19, 22-23, மாற் 16:15-20

காலை 6.00 : பெருவிழாத் திருப்பலி

தலைமை & மறையுரை : மேதகு ஆயர். **நசரேன் சூசை,** கோட்டாறு மறைமாவட்டம்

காலை 8.00 : மலையாளத்திருப்பலி

தலைமை & மறையுரை : பேரருட்பணி. **கிளாடின் அலெக்ஸ்,** திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டம்

காலை 11.00 : தேர் பவனி

மாலை 07.00: **தேரில் ஆடம்பரக் கூட்டுத் திருப்பலி**

சிறப்பிப்போர் : பேராலய இந்திய கிறிஸ்தவ மறுமலர்ச்சி இயக்கம், கோட்டாறு

## மறைசாட்சி புனித தேவசகாயத்தின் கல்லறை



| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 23.04.1712 |
| திருமுழுக்கு | : | 14.05.1745 |
| இறப்பு | : | 14.01.1752 |
| அருளாளர் | : | 02.12.2012 |
| புனிதர் | : | 15.05.2022 |



**மறைசாட்சி புனித தேவசகாயம் அவர்களின் கல்லறை கோட்டாறு பேராலயத்தில் அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும்.**

**திருக்கொடியிறக்க நிகழ்வு 08.12.2022 மாலை 6:00 மணிக்கு நடைபெறும்.**

- திருவிழா நாட்களில் ஒவ்வொரு நாளும் மாலை 5:00 மணி முதல் 6:30 மணி வரை தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளில் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்படும்.
- கோட்டாறு பேராலய "ஆதாயம்" இதழின் சந்தாதாரர் ஆகுங்கள்.
- தங்கம், வெள்ளி மற்றும் திருவிழா நன்கொடைகள் கொடுப்பவர்கள் பங்கு அருட்பணியாளரிடம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்...

## விழாவில் கலந்து ஆசி பெற வருக!

## அனைவருக்கும் திருவிழா நல்வாழ்த்துக்கள்!



Assisi Offset Press, Ngl, Cell : 76677 29591